வார இதழ்
# தேசியம்
THESIYAM தේසියම්
www.thesiyamnews.com
REGISTERED AS A NEWS PAPER

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jafna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 03 இதழ் - 33 19.03.2025 - 25.03.2025 வள்ளுவர் ஆண்டு 2054 பக்கங்கள் 12 ஊக்குவிப்பு: 100/=

# நீதியின்றி இறந்து கொண்டிருக்கிறோம் பிள்ளைகளை ஒவ்வொரு நாளும் தேடித் தேடி

உறவுகள் வட்டுவாகலில் போராட்டம்

▶▶02



## விஜேவீர படுகொலை: நழுவும் என்.பி.பி. அரசு

▶▶08



## அநுர அரசுக்கு ஏப்ரல் 21 வரை கால அவகாசம் - பேராயர்!

▶▶04





## சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கை அஞ்சுவது ஏன்?

ஜேந்திரகுமார் எம்.பி. கேள்வி

▶▶04

## ஏப்ரல் 25க்குப் பின் உள்ளூராட்சித் தேர்தல்

▶▶10

## தமிழர்களின் மரபுரிமைகள் கட்டிக்காக்கப்பட வேண்டும்

▶▶04

## தலைவர் பிரபாகரனின் சாவை அறிவிக்கும் நிகழ்வு!

▶▶04

# அழிக்கப்பட்ட சுயாதீன மாணவர் ஒன்றியமும் ஜே.வி.பி. படுகொலை செய்த தயா பத்திரனவும்!

▶▶05

தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை

# பிள்ளைகளை ஒவ்வொரு நாளும் தேடித் தேடி நீதியின்றி இறந்து கொண்டிருக்கிறோம்

## உறவுகள் வட்டுவாகலில் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக நீதிகோரி போராட்டம் மேற்கொண்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை கடந்த வாரம் முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

முல்லைத்தீவு கோத்தபாய கடற்படை முகாமிற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது வட்டுவாகல் பாலம் ஊடாகப் பேரணியாக சென்று வட்டுவாகல் பகுதியில் இறுதியாக கையளிக்கப்பட்ட இடத்திற்கு முன்பு வரை சென்று

▶▶10

# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பட்டலந்த அறிக்கை ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடரும் நெருக்கடி

## அறிக்கையை பாராளுமன்றில் சமர்பிக்க அரசாங்கம் நடவடிக்கை பல்வேறு தரப்பினரும் சி.ஐ.டியில் முறைப்பாடு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அண்மையில் அல்ஜசீரா ஊடகத்துக்கு வழங்கப்பட்ட நேர்காணல் மற்றும் அதில் சர்ச்சைக்குள்ளான பட்டலந்த விவகாரமும் தற்போது தென்னிலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பட்டலந்த விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு உரிய விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் இந்த வாரத்துக்குள் குறித்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான நலிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதன்படி, பட்டலந்த விவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக குற்றச்சாட்டுகள் காணப்படுவதை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளார் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை எனவும் இந்த குற்றச்சாட்டுகளை எங்களால் நிராகரிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பட்டலந்த விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு உரிய விசாரணைகளை இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பினால் வலியுறுத்தி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நேர்க்காணலும் பட்டலந்த விவகாரமும் தற்போது நாட்டில் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளதாக இலஞ்ச ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார தெரிவித்துள்ளார்.

அத்துடன், பட்டலந்த விடயம் பொறுப்புக்கூறலுக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் தற்போது பரவலாக எழுந்துள்ளன.

### பட்டலந்த அறிக்கை என்றால் என்ன?

ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருட ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றார்.

அதன்படி, 1988 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் தான் உரிய நீதியை நிலைநாட்டுவதாக அவர் தேர்தல் மேடைகளில் வாக்குறுதி வழங்கியே ஆட்சிக்கு வந்தார்.



அதற்கமைய, 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி பிறப்பித்த உத்தரவுக்கு அமைய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவே பட்டலந்த விசாரணை ஆணைக்குழு என அழைக்கப்படுகிறது.

அரச உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பியகம பட்டலந்த வீடமைப்பு திட்டத்தில் உள்ள வீடுகளுக்குள் சட்டவிரோதமான முறையில் இளைஞர்களை தடுத்துவைத்து சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்தமை அல்லது காணாமலாக்கியமை தொடர்பில் விசாரணை நடத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளம் கண்டு பரிந்துரை செய்வதே இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாகும்.

அதன்படி, அப்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி D. ஜயவிக்கிரம தலைமையில் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் உறுப்பினராக மேல் நீதிமன்ற நீதிபதி ே.நு திசாநாயக்க செயற்பட்டிருந்தார்.

அத்தோடு, இந்த விசாரணைகுழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டதுடன் சட்டமா அதிபர் திணைக்களம் சாட்சிகளை வழிநடத்தியிருந்தது.

தற்போதைய உயர் நீதிமன்ற நீதியரசரும் அரசதரப்பு சட்டத்தரணியுமான யசந்த கோதாகொட மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன ஆகியோரை சட்டமா அதிபர் திணைக்களம் இதற்காக நியமித்திருந்தது.

ஆணைக்குழுவின் காலம் 12 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டதுடன் 1998 மார்ச் 26 ஆம் திகதி ஆணைக்குழுவின் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

### ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பு?

பட்டலந்த சித்தரவதை நடந்த காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்தார்.

பட்டலந்த வீடமைப்புத்தொகுதியும் அந்த சந்தர்ப்பத்தில் கைத்தொழில் அமைச்சுக்கு சொந்தமாகவிருந்தது.

ஆணைக்குழுவில் வெளிக்கொணரப்பட்ட சாட்சியங்கள் மூலம் A2/2, A2/1, A2/3, A1/7, B2, B1, B7 ஆகிய வீடுகளை ரணில் விக்கிரமசிங்கவே பயன்படுத்தியிருந்தார் எனவும் பட்டலந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பேலியகொடை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி டக்ளஸ் பீரிஸ் உள்ளிட்ட பொலிஸ் குழுவினருக்கும் இந்த வீட்டுத்திட்டத்தின் வீடுகள் வழங்கப்பட்டிருந்தமையும் ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிக்கொணரப்பட்டது.

களனி நாசகார செயல் ஒழிப்புப்பிரிவு அதிகாரிகளுக்கும் இங்கு 13 வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதிலுள்ள ஒரு வீடு ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டிருந்ததாகவும் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய வீடுகளை வழங்கும்போது ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைகள் மற்றும் உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டமையும் அறிக்கையில் வெளியானது.

பட்டலந்த ஆணைக்குழுவிற்கு ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து விசாரணை நடத்தவும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதற்கமைய, அறிக்கையின் 10 மற்றும் 17 ஆவது பக்கமும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பல்வேறு குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 வருடங்களாக சாட்சியங்களை சேகரித்த பட்டலந்த ஆணைக்குழு இறுதி அறிக்கையில் சில பரிந்துரைகளை முன்வைத்தது.

அதன்படி, இந்த வதை முகாமுடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மனித உரிமைகளை பாரதூரமான முறையில் மீறியுள்ளதால்

▶▶11

வார இதழ் தேசியம் THESIYAM
ஆசிரியர்பீடம்

தொலைபேசி: 94779090015, 0212223190
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

# தொடர் செயற்பாட்டு மக்கள் அரசியல்.

காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக ஈஸ்ரர் குண்டுவெடிப்பு நடந்ததையடுத்து சிறிலங்கா பொதுஜன பெரமுன நாட்டைக் கைப்பற்றிக் கொண்டது. ஆனால். அந்த அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலை அவர்களது முடிவுகளாலேயே ஏற்பட்டது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அரகலயவை கொண்டுவந்தது. அந்த அரகலய நாட்டில் மேலும் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுதான் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

ஆனால், தற்போதுள்ள ஆட்சியையும் கலைந்து விடுவதற்கான வேலைகள் நடைபெறுவதாக தெரிகிறது. அதற்கான முதல் சமிக்ஞையாகவே கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையினுடைய அண்மைய கருத்தைக் கொள்ளமுடிகிறது. அந்தவகையில் ஈஸ்ரர் குண்டுவெடிப்பு சார் அலையொன்றும் தேசிய மக்கள் சக்திக்கு அடித்திருந்தது. அதனால் உருவான வெறுப்புகளும் பொதுஜன பெரமுன துரத்தப்படுவதற்கும் தோல்வியைத் தழுவுவதற்குக் காரணமாக இருந்தது.

நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதுள்ள ஆட்சியாளர்களை ஆட்சி பீடத்துக்கு ஏற்றினோம். ஆனால் அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் அரசு நகர்ந்து வருகிறது. இது சரியல்ல என்று அண்மையில் கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தொடங்கிவைக்கப்பட்ட நீதி கோரும் போராட்டத்திற்கு இதுவரையில் சரியான முடிவு கிடைக்கவில்லை. நல்லாட்சி காலத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் நடந்த குண்டுவெடிப்புக்கு கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த வேளையில் விசாரணைகள் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியானார். அவ்வேளையிலும் அந்த விசாரணை முடிவு செய்யப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலுக்கு நீதி வழங்கப்படவில்லை என்பதனாலேயே உருவான அலையால் தேசிய மக்கள் சக்திக்கு ஆதருவு அதிகரித்து ஆட்சி உருவாக்கத்திற்கு பெரியளவான பங்களிப்பொன்றை வழங்கியிருக்கிறது என்பது உண்மை. அது தவிர்க்கப்படுவதற்கில்லை. அந்தவகையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் விடுக்கின்ற எச்சரிக்கைக்கு பலம் இருக்கத்தான் செய்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று ஆறு ஆண்டு நிறைவடைகிறது. இன்னமும் அத்தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படவோ, தண்டனைக்கு உட்படுத்தப்படவோ இல்லை. அந்த விசாரணையை முடிவுக்குக் கொண்டு வருவதனைவிடவும் வேறு திசைகளுக்கு திருப்பப்படும் பந்தைக் கைமாற்றும் வேலைகளே நடைபெற்று வருகின்றன. அதில் ஒன்றுதான் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியத் தீவிரவாதம் உள்ளதாக வெளியிடப்பட்ட தகவலாகும்.

2019 ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் பல இஸ்லாமிய அமைப்புகள் தடை செய்யப்பட்டன. அவ் அமைப்புகளுடன் தொடர்புபட்ட பலர் கைது செய்யப்பட்டனர். வழக்குகள் தொடரப்பட்டன. அவ் வழக்குகள் இன்னமும் முடிவுக்குவரவில்லை.

நாட்டின் அரசியல் கலாச்சாரம் மாற்றப்பட வேண்டும் என்று எல்லோரும் நினைத்தாலும் அதனை அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியாது. இருந்தாலும் ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்தது இவ்வாறானதொரு புதுமையை அவர்கள் ஏற்படுத்துவார்கள் என்பதற்காகவே. இருந்தாலும் அது நடைபெறவில்லை. அவர்களும் அரசியல் தந்திரங்களையே நடத்துகிறார்கள் என்கிற பார்வையொன்று இப்போது உருவாகி வருவதனைக் காணமுடிகிறது.

உதாரணமாக சொன்னதைச் செய்கிறேன் என்ற தோரணையில் அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி தனது கட்சியை பெரும்பான்மையுடன் வெற்றிபெறச் செய்து கொண்டார். பின்னர் அமைச்சரவை, ஆட்பிரிப்பு என நகர்ந்து வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து நகர்த்தினார்.

வரவு செலவுத்திட்டத்தில் ஒன்றுமில்லை என்ற நிலைமை காணப்படுகையில் வரவுசெலவுத்திட்ட விவாதமே நிறைவுக்கு வரமுன்னர் உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்து அரசியல் தரப்பினரையும் மக்களையும் அதற்குள் செல்லவைத்து திசைதிருப்பும் வேலைப்பாடு ஒன்றினைச் செய்திருக்கிறார் அனுரகுமார திசாநாயக்க.

இது ஒருவகையில் அரசியலே. தமக்குரிய ஆதரவையும் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். மக்களையும் ஏமாற்றவேண்டும் என்கிற வகையில் நகர்ந்து கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்னும் எத்தனை காலத்திற்கு நகரும் என்று சிலவேளைகளில் சந்திக்க வேண்டியே ஏற்படும். இருந்தாலும், நாட்டின் கட்டமைப்பை எடுத்த எடுப்பிலேயே மாற்றியமைத்து விட முடியுமா என்பது கேள்விக்குறியே.

நாட்டில் இப்போது தொடர்கின்ற நெருக்கடிகளுக்கு தீர்வை எதிர்பார்க்கின்ற ஒவ்வொருவரும் நாட்டின் அரசியல் தளத்தினை மாற்றிவிட்டோம் என்று பாராதிருக்கக்கூடாது. என்பதனை நினைவுபடுத்துவதாகவே கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் கருத்து இருக்கிறது. அனைவரும் புதிய அரசியல் கலாச்சாரத்துக்காக தொடர்ந்தும் பாடுபடவேண்டும்.

## தேசியப் பார்வை

2007 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில், ஜேவிபி (JVP) பிரித்தானிய உயர் ஸ்தானிகராலய வாயிலின் முன்பாக ஒரு பிரமாண்டமான போராட்டத்தை நடத்தியது.

அனுரகுமார திஸ்ஸநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், காணாமலாக்குதல் உட்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்கு எதிராக ஜேவிபி கடும் கண்டனம் தெரிவித்தது.

2006 ஆம் ஆண்டில், கோட்டாபய ராஜபக்சவின் Triploli Platoon , கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் உட்பட 1,000 க்கும் மேற்பட்டோரை கடத்தியிருந்தது.

அதேபோல, 2007 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும் நூற்றுக்கணக்கானோர் கடத்தப்பட்டனர்.

இவ்வாறு ஆயிரக்கணக்கான மக்கள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு கடத்தப்பட்ட போது வேடிக்கை பார்த்த ஜேவிபி பிரித்தானிய பாராளுமன்றத்தில் அது தொடர்பாக நடைபெற்ற விவாதத்தை தொடர்ந்து கொதிப்படைந்தது

இதன் விளைவாக, கோட்டாபய ராஜபக்சவின் பங்காளியாகவிருந்த அனுரகுமார திஸ்ஸநாயக்க, விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி உட்பட்ட ஆயிரக்கணக்கான ஜேவிபி உறுப்பினர்கள் வீதிக்கு இறங்கினர்.

வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதற்கு பிரித்தானிய அரசாங்கமே காரணம் என்று குற்றம் சாட்டினார்

கோட்டாபய ராஜபக்சே உட்பட ராஜபக்சே குடும்ப உறுப்பினர்களை நியாயம் செய்தனர்

மேலும், “எங்கள் நாட்டிலுள்ள மனித உரிமை அமைப்புகள் மூலம் மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காண முடியும்” என்று கோஷமிட்டனர்

பிரித்தானியா உட்பட்ட வெளிநாடுகளின் தலையீடுகள் அவசிய மற்றது என சத்தமிட்டார்கள்

இருப்பினும், நியத்தில் மேஜர் Prabath Bulathwatte என்பவரின் தலைமையில் அரசியல் மற்றும் பணம் பறிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட Triploli Platoon யால் கடத்தப்பட்ட எவரும் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

அதே போல 2009 ஆம் ஆண்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எவரும் இதுவரை வீடு திரும்பவில்லை

அண்மையில்கூட, வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் முல்லைத்தீவில் போராட்டம் நடத்தியிருந்தனர்

அப்போது ராஜபக்சே குடும்பத்தின் பங்காளியாகவிருந்த ஜேவிபி இப்போது அதிகாரத்தில் இருக்கின்றது

தாங்கள் புது அவதாரம் எடுத்திருப்பதாக கதை சொல்லுகின்றது

வடக்கு கிழக்கில் கடத்தலில் ஈடுபட்ட குறைந்தது 5 வெள்ளை வாகனங்கள் பாதிக்கப்பட்ட மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கடத்தலுக்கு பயன்படுத்திய 252-3286 என்ற இலக்க வெள்ளைவான் அடையாளம் காட்டப்பட்டுள்ளது

அதே போன்று மட்டக்களப்பில் பொதுமக்களை கடத்த பயன்படுத்திய 58-6974 இலக்க வெள்ளைவான் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது

அம்பாறையில் அப்பாவி மக்களை கடத்த பயன்படுத்திய இலக்க தகடற்ற வெள்ளை வான் ஒன்றை உவிந்து குருகுலசூரிய என்கிற பத்திரிகையாளர் படங்களுடன் அடையாளம் காட்டி இருந்தார்

இந்த வாகனங்களை கண்டறிவதன் ஊடாகவே மிக இலகுவாக பின்னணி சூத்திரதாரிகளை கண்டறிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய முடியும்.

இனவாதம் மதவாதம் தோற்கடிக்கப்பட்டதாக ஜேவிபி பேசுவது உண்மையென்றால் பாதிக்கப்பட்டோருக்கு தீர்வு பெற்று கொடுக்க முடியும்.

கோத்தபாயா ராஜபக்சே உட்பட்ட சூத்திரதாரிகளை நீதியின் முன் நிறுத்த முடியும்.

ஆனால் 1987 ஆம் ஆண்டு இயங்கிய பட்டலந்த வதை முகாம் குறித்து வெற்று அறிக்கை வெளியிடும் ஜேவிபி 2006-2009 யில் கோட்டாபய ராஜபக்சே இயக்கிய வதை முகாம்கள் குறித்து பேச மறுக்கின்றது

இனவாதத்தின் பிறப்பிடம்மான ஜேவிபி க்கு இவ்வாறான இரட்டை நிலைப்பாடுகள் புதிதல்ல

ராஜபக்சே குடும்ப ஆட்சியாளர்களுக்கு எதிராக வெளிநாடுகள் மனித உரிமை குற்றசாட்டுகளை முன்வைத்தபோதெல்லாம் ஜேவிபி கொந்தளித்தது.

ஆனால், அதே நாடுகள் வெளிநாட்டு ஆயுத உதவி, புலனாய்வு தகவல், இராணுவ பயிற்சி, விமானிகள் மற்றும் படைத்துறை ஆலோசகர்களை வழங்கியபோது மௌனமாக ஏற்று கொண்டது மொத்தத்தில் 2007 ஆம் ஆண்டில் ராஜபக்சே குடும்பத்திற்கு துணை நின்று, அத்துணை அநியாயங்களையும் செய்த ஜேவிபி, தற்போதும் தமிழ் சமூக மட்டங்களில் குழப்பங்களை ‘Divide and rule’ ஏற்படுத்தி அரசியல் செய்கின்றது

வார இதழ் தேசியம் www.thesiyamnews.com THESIYAM

# அநுர அரசுக்கு ஏப்ரல் 21 வரை காலஅவகாசம்

## – பேராயர் !



இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதுள்ள ஆட்சியாளர்களை ஆட்சிபீடத்துக்கு ஏற்றினோம். ஆனால் அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் இருந்து வந்தால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படுமென கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன், லசந்த விக்ரமதுங்க கொலை, பிரதீப் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீய்த் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தக்கூடாது. இந்த விடயங்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக் கொள்ளாமல், எவருடனும் 'டீல்' போடாமல்

▶▶11

## தலைவர் பிரபாகரனின் சாவை அறிவிக்கும் நிகழ்வு!

தலைவர் பிரபாகரனின் சாவை அறிவிக்கும் நிகழ்வு அண்மையில் சுவிஸ்ர்லாந்தில் நடந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனையின் இணைப்பாளர், பிரசாத் என்பவரினால் இந்த அறிவிப்பை வெளியிடும் காணொலிக் காட்சிகள் அண்மையில் சமூக ஊடகங்களில் வெளியாகின. அந்த அறிவிப்பில் அவர் கூறியவை வருமாறு:

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வீரச்சாவு

▶▶11

## சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கை அஞ்சுவது ஏன்?

### கஜேந்திரகுமார் எம்.பி.கேள்வி

உண்மையான நல்லிணக்கத்தை நாட்டில் ஏற்படுத்த விரும்பினால் கடந்த அரசாங்கங்கள் அரசாங்கங்கள் கடைப்பிடித்த போக்கினைக் கைவிட்டு வெளிநாட்டுப் பொறிமுறைக்கு வழிவிடவேண்டும். எதற்காக நீங்கள் வெளிநாட்டுப் பொறி முறைக்கு அச்சங்கொள்ள வேண்டும்? இவ்வாறு நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பியுள்ளார்.

▶▶10

## கனடாவில் நீதியமைச்சராக பதவியேற்றார் ஹரி



கனடா வரலாற்றில் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் பிறந்தவரான ஹரி ஆனந்தசங்கரி நீதி அமைச்சராகவும் சட்டமா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னியும் அவரது அமைச்சரவையும் பதவியேற்ற

▶▶10

## இனமுறுகலை ஏற்படுத்த அர்ச்சுனா எம்.பி.முயற்சி

### யாழ். முஸ்லிம்களின் ஒன்றிய அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாண முஸ்லிம்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் விசத்தைக் கக்கியுள்ளார். ஒரு இனத்தையே படுகொலை செய்ய வேண்டும் என்ற ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன்

▶▶10

## ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

### நாடாளுமன்றில் சாணக்கியன் கேள்வி!

இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் ஸ்ரீலங்காப் படையினரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படையினரால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட எத்தனையோ பேர் உள்ளனர். இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்ட படையினருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகால அரசாங்கங்கள் தங்களை வெளிப்படையாகவே இனவாதிகள் என அடையாளப்படுத்தி

▶▶10

## தமிழர்களின் மரபுரிமைகள் கட்டிக்காக்கப்பட வேண்டும்

### துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா தெரிவிப்பு

பாரம்பரியம் அதுவே தமிழர்களின் வாழ்வியல். அந்தவகையில் தமிழ் மக்களின் மரபுரிமைகள் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம் நடத்திய மூன்றாவது சர்வதேச இந்து மாநாடு -2025 கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கென தனித்துவமான அடையாளங்கள் காணப்படுகின்றன.

▶▶10

## இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை; அரசியலுக்காக பூதாகரமாக்கப்பட்டது

### கச்சதீவில் தமிழக மீனவர்கள் தெரிவிப்பு!

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் இலங்கை - இந்திய பக்தர்கள் கலந்துகொள்வது வழமை. அந்தவகையில் திருவிழாவின் இறுதி நாளில் இலங்கை மீனவர்கள் - இந்திய மீனவர்களிடையே நட்புறீதியன கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றமை, இழுவைமடிப் படகுகளால் கடல் வளம் அழிக்கப்படுகின்றமை, பல மீனவர்கள் கடற்றொழிலையே கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் மன்னார் மீனவர் ஒருவர் தமிழக மீனவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட தமிழக மீனவர்கள் இலங்கையர்கள் இந்தியாவிற்கு படகில் வந்து தொழில் செய்வதும் இந்தியர்கள் இலங்கை வந்து தொழில் செய்வதும் காலம்காலமாக இடம்பெறும் ஒன்று. தென்னிலங்கையில் இன்றும் இழுவைப்படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன என்று சுட்டிக் காட்டினர். மேலும் கைது, சிறைத் தண்டனைகள், படகு பறிமுதல்களால் தமது மீனவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும் எடுத்துரைத்தனர்.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினையானது தொப்புள் கொடி உறவுகளாக இருந்த எம்மிடைய குறுகிய காலத்தல் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று. இது அரசியல்லாபம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் பூதாகரமாக்கப்படுகிறது. இரு நாட்டு மீனவர்களும் ஒன்றாகக் கலந்துரையாடினால் நிச்சயம் தீர்வுகிட்டும் அடுத்த தலை முறையாவது நிம்மதியாக வாழ வழி செய்யும் நாங்கள் இப்பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட எப்போதும் தயாராகவுள்ளோம் என தமிழக மீனவர்கள் தெரிவித்தனர்

## புலிகளுக்கு கொலை கலாச்சாரத்தை ஜே.வி.பி.யே கற்றுக் கொடுத்தது

### எஸ்.பி.திஸாநாயக்க

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் கொலை கொள்ளைக் கலாசாரத்தை மக்கள் விடுதலை முன்னணியே (ஜே.வி.பி.) கற்றுக் கொடுத்தது என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் மிக்க நிலையிலேயே காணப்படு

▶▶10

## தொடர்கதையாக நீள்கின்றது மேய்ச்சல் தரவைப் பிரச்சினை

### ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

வன்னிப் பிரதேசத்தில் ஏறக்குறைய 3இலட்சத்து 70ஆயிரம் கால் நடைகள் காணப்படுகின்றபோதிலும் அவற்றுக்கான மேயச்சல் தரவையின்மையால், கால்நடை வளர்ப்பாளர்கள் அவதியுறுகின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் கால்நடைகளும், மன்னார் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து

▶▶10

# அழிக்கப்பட்ட சுயாதீன மாணவர் ஒன்றியமும் ஜே.வி.பி. படுகொலை செய்த தயா பத்திரனவும்

**– நவீனன்**

(பல்கலைக்கழக மாணவ தலைமைகளை கைப்பற்றுவதில் 1985களின் பிற்பகுதியில் ஜேவிபி மும்முரமாக இருந்தது. தங்களை எதிர்த்தவர்களை வகைதொகையின்றி ஜேவிபி அழித்தது வரலாறாகும்.

தற்போது தென் இலங்கையில் மாற்றத்தை மையமாகக் கொண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் வரலாற்றின் இருண்ட அத்தியாங்களில் இருந்து பல பக்கங்கள் அழிக்கப்பட்டாலும் உண்மைகள் ஒருபோதும் உறங்கப் போவதில்லை)

இரண்டாவது ஜனதா விமுக்தி பெரமுனாவின் 1987-89 கிளர்ச்சிக் காலத்தில் ஜேவிபி நாடு பூராக முழு பல்கலைக்கழக அமைப்பை கைப்பற்றுவதில் மும்முரமாக இருந்தது. தங்களை எதிர்த்தவர்களை வகை தொகையின்றி ஜேவிபி அழித்தது வரலாறாகும்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் தனது கல்விக் காலத்தின் போது தயா பத்திரன சுயாதீன மாணவர் ஒன்றியத்திற்கு முன்னோடியாக இருந்தார். அது மாத்திரமன்றி ஈழப்போராட்டத் தினை சிங்கள மக்கள் மத்தியில் தெளிவு படுத்திய ஓர் முற்போக்குவாதியாகவும் விளங்கினார்.

ஈரோசின் மாணவர் அமைப்பான GUYS உடன் இணைந்து மாணவர் எழுச்சிக்காகவும் குரல் கொடுத்து வந்தவர். அத்துடன் தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து சுயநிர்ணய கோரிக்கைக்கும் ஆதரவாக குரல் கொடுத்தவரே தயா பத்திரன.

## சுயாதீன மாணவர் ஒன்றிய பல்கலைக்கழக கூட்டமைப்பு:

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் கூட்டமைப்பான "சுயாதீன மாணவர் ஒன்றியம்" (ISU) என்பது இலங்கை முழுவதும் உள்ள மாணவர் சங்கங்களின் கூட்டமைப்பாகும்.

ஏறக்குறைய எழுபது மாணவர் கூட்டமைப்புடன் இணைந்து இலங்கையில் உள்ள அனைத்து உயர் கல்வி நிலையங்களில் தீவிரமாக செயற்பட்டது. அத்துடன் ISU என்பது இலங்கையில் உள்ள முழு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தலைமைத்துவம் அளிக்கப்படும் அமைப்பாகவும் விளங்கியது.

1985களில் இலங்கையின் மிகப்பெரிய மாணவர் அமைப்பாகவும், அனைத்து முக்கிய பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் உட்பட 15 உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் நடவடிக்கை குழுக்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்தியது.

## தயா பத்திரன படுகொலை ஏன்?

தயாபத்திரன 1985-1986 காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுயாதீன மாணவர் ஒன்றியத்தின் தலைவராக இருந்தார். ஜனதா விமுக்தி பெரமுன சார்பு செயற்பாட்டாளர்களாலும், ஜேவிபி பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் தயாபத்திரன கடுமையாக குற்றம் சாட்டப்பட்டு எதிப்புகளை முகம் கொண்டார்.

தயா பத்திரன இடதுசாரியாக இருந்தாலும், இலங்கையில் மாணவர் சங்கங்களின் மீது கிட்டத்தட்ட முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த மார்க்சிஸ்ட் லெனினிச அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனா வனமுறையை அவர் கடுமையாக எதிர்த்தார்.



எனவே அவரும் அவர் தலைமையிலான சுயாதீன மாணவர் ஒன்றியமும் ஜனதா விமுக்தி பெரமுனாவின் 1987-1989 ஜேவிபி கிளர்ச்சிக் காலத்தில் மிகவும் கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியது.

தயா பத்திரனவின் படுகொலை 1986 டிசம்பர் 15 இல் இடம்பெற்றது. இந்த படுகொலை 1987-1989 ஜனதா விமுக்தி பெரமுனா கிளர்ச்சியின் ஒரு முக்கிய சம்பவமாக விளங்கியது.

## ஏழ்மையான இடதுசாரி மாணவர்:

அனைத்து பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பை மாணவர்களின் பொது அரசியல் முகமாக ஜனதா விமுக்தி பெரமுனாவின் தலைமையால் ஒதுக்கப்பட்டதால், ஜேவிபி முழு பல்கலைக்கழக அமைப்பையும் கைப்பற்றுவதில் மும்முரமாக இருந்தது.

கலாநிதி தயான் ஜயதிலகா எழுதிய Sri Lanka: The Travails of Unfinished War Protracted Crisis (1995) என்ற புத்தகத்தில், தயா பத்திரன மிகவும் ஏழ்மையான மாணவர், தீவிரஇடதுசாரி என்று விவரித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் நாள் அன்று, அவர் சோமசிறி என்ற சகமாணவருடன் பிலியந்தலை, போல்கொடஏரிக்கு அப்பால் தனிமையான இடத்திற்கு கடத்தப்பட்டார். கடத்தல்காரர்கள் மாணவர் மற்றும் இடதுசாரி ஆர்வலர்கள் பற்றிய தகவல்களைக் கோரி அவரையும் சோ மசிறியையும் சித்திரவதை செய் தனர்.

இதனை யாத்ரீகர்கள் குழு ஒன்று குறுக்கிட்டு அன்று பௌர்ணமி தினமாக இருந்ததால் சோமசிறியின் உயிரைக் காப்பாற்றியது. ஆனால் அந்த இடத்தில் பத்திரனவின் தொண்டை அறுக்கப்பட்டு, இறுதியில் அவர் 1986 டிசம்பர் 15 இல் படுகொலை செய்யப் பட்டார்.

இதுவே 1987-89 ஜனதா விமுக்தி பெரமுனா கிளர்ச்சியின் முதல் இலக்கு வைக்கப்பட்ட கொலையாக கருதப்படுகிறது. ஜனதா விமுக்தி பெரமுனவின் கிளர்ச்சியின் போது 60,000 பேர் இறந்தனர்.

ஜனதா விமுக்தி பெரமுனா அதன் முந்தைய காலங்களில் இடதுசாரி அரசியலில் இருந்து வந்த தயா பத்திரன மற்றும் விஜய குமாரதுங்க போன்ற தீவிர பிரமுகர்களைக் கொன்று வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

தோல்வியடைந்த கிளர்ச்சியின் ஆறு வருடங்களின் பின்னர் 1996 இல், பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தயா பத்திரன கொலையில் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு தொடர்பு இல்லை என்று மறுத்தார்.

## பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் கூட்டமைப்பு

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் கூட்டமைப்பான 'சுயாதீன மாணவர் ஒன்றியம்' என்பது இலங்கை முழுவதும் உள்ள மாணவர் சங்கங்களின் கூட்டமைப்பாகும்.

இலங்கையில் உள்ள மிகப்பெரிய மாணவர் அமைப்பாகவும், உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் குழுக்களின் குரலைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.


1985களில் ஐளுரு ஆனது இலங்கை முழுவதும் உள்ள பல பல்கலைக்கழகங்களின் முக்கிய நடவடிக்கைக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல மாணவர் சங்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.

இந்த பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் கூட்டமைப்பில் களனி பல்கலைக்கழகம்,பேராதனை பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், ரு/ஹுணு பல்கலைக்கழகம்,இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் ,தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், வயம்ப பல்கலைக் கழகம், பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் உறுப்பினர்களாக இருந்தனர்.



## சுயாதீன மாணவர் ஒன்றிய வரலாறு:

சுயாதீன மாணவர் ஒன்றியம் 1969 ஜூன் 18 அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டது. முதலாவது பொதுக்கூட்டம் பேராதனைப் பல்கலைக்கழக இராம நாதன் மண்டபத்தில் நடைபெற் றது. இதற்கு துணைவேந்தர் பேராசிரியர் இ.ஓ.ஈ. பெரேரா நிதியளித்து உரையாற்றினார்.




பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த மல்கம் விஜேசிங்க ISU இன் முதலாவது ஒருங்கிணைப்பாளராக இருந்தார். அவர் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்கு மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும் இருந்தார்.

1976 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ரோகண வீரசூரிய பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து இவர்களின் போராட்டம் உச்சக்கட்டத்தை எட்டியது.

வீரசூரியவின் படுகொலையுடன், ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி) க்கு விசுவாசமான மாணவர் குழுக்கள், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாணவர் சங்கத்தின் வசம் இருந்த ஐஎஸ்யின் கட்டுப்பாட்டைப் பெற முயன்றது.

ஆனாலும் ஜே.வி.பி சோசலிச மாணவர் ஒன்றியத்தின் ISU மீதான கட்டுப்பாட்டை முழுமையாக கைப்பற்ற 1976 முதல் 2012 வரை முயன்றது.

ஜே.வி.பி சோசலிச மாணவர் சங்கத்தின் பத்து உறுப்பினர்களும், முன்னணி சோசலிஸ்ட் கட்சியின் புரட்சிகர மாணவர் சங்கத்தின் சுமார் 35 உறுப்பினர்களும் பல்கலைக்கழகங்களில் முழு நேர அரசியலில் ஈடுபட்டனர்.


1977இல் இடதுசாரி வெகுஜன இயக்கத்தின் உருவாக்கத்துடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் மாணவர் சாந்த பண்டார, ISU சீர் திருத்தங்களுக்குப் பிறகு அதன் ஒருங்கிணைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நீண்டகாலமாக ஜேவிபி நாடு பூராக முழு பல்கலைக்கழக அமைப்பையும் கைப்பற்றுவதில் மும்முரமாக இருந்தது. தங்களை எதிர்த்தவர்களை வகை தொகையின்றி ஜேவிபி அழித்தது வரலாறாகும்.

ஆயினும் மாணவர் எழுச்சிக்காகவும் குரல் கொடுத்து வந்ததுடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய கோரிக்கைக்கும் ஆதரவாக குரல் கொடுத்த தயா பத்திரன படுகொலையானது சுயாதீன மாணவர் சமுதாயத்தை சிதைத்தது என்றே கருதலாம்.

தென் இலங்கையில் மாற்றத்தை மையமாகக் கொண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் வரலாற்றின் இருண்ட அத்தியாங்களில் இருந்து பல பக்கங்கள் அழிக்கப்பட்டாலும் உண்மைகள் ஒருபோதும் உறங்கப் போவதில்லை.

வார இதழ் தேசியம் THESIYAM www.thesiyamnews.com



## குறுக்கெழுத்துப் போட்டி – 02

### இடமிருந்து வலம்

1. ஜனநாயகக் கடமையொன்று.
5. வாழ்வாதாரத்துக்காக கடலை நாடி செல்பவர்கள்.
7. நீண்டகால நீர் பிரச்சினை உள்ள நதி ஒன்று.
8. நகை செய்ய பயன்படுத்தப்படும் பெறுமதிமிக்க உலோகம் ஒன்று. குழம்பி.
10. விஜய் நடித்த வெற்றிப் படம் ஒன்று.
12. பெண்ணை இப்படியும் கூறுவர்.
14. கணவனை இழந்தவள் திரும்பி.
15. இராசிகளில் ஒன்று.
16. சேவை செய்தலைக் குறிக்கும். திரும்பி.

### மேலிருந்து கீழ்

1. இராமாயண காவியத்தை இயற்றிய முனிவர்.
2. இறுமாப்பு என்றும் சொல்லலாம்.
3. ஆனந்தம் அடைதல் என்றும் பொருள்படும்.
4. வாகனத்தில் அல்லது விலங்கின் மீது பயணித்தலைக் குறிக்கும்.
6. புற்கள் அடர்ந்த இடத்தையும் குறிக்கும். தலைகீழ்.
9. முல்லை கொடியை நினைவுபடுத்தும் மன்னவன்.
11. இசையுடன் தொடர்புடையது. குழம்பி.
12. நகைகளில் ஒன்று.
13. தடுப்புக்காவலில் உள்ளவர்.
14. மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று. குழம்பி.



### வெற்றி அடைந்தோர்

த.சிந்துஜா
உருத்திரபுரம் கிளிநொச்சி — ரூ.2000/-

குறைட்ணம் உமாகாந்
நாவலர் வீதி அரியாலை யாழ்ப்பாணம் — ரூ.1500/-

உ.ஜெனின் டீனுஜா
யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை — ரூ.1000/-

**சரியான பதில்களை தபால் அட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி

இல.12/1 செங்குந்த அங்காடி, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம்.

முதலாம் பரிசு - 2000/- | இரண்டாம் பரிசு - 1500/- | மூன்றாம் பரிசு - 1000/-



அ.இ.உமாமா, தரம்-2
ஆனவிழுந்தான், ஹொரொவ்பொத்தான.




ப.பிரரிக்ஷா தரம் - 08
யா/ சாவகச்சேரி
இந்துக் கல்லூரி



ஜே.ஐனுஷிகா, தரம் 04, புத்தளம்





வழிகாட்டுங்கள்





வரைந்து பழகுவோம்.



# அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால்



இரண்டு தூக்கணாங்குருவிகள் ஒரு கூடு கட்டி, அதில் வசித்து வந்தன. ஒருநாள், இரை தேட அவை இரண்டும் வெளியே போயிருந்த சமயத்தில், ஒரு சிட்டுக்குருவி பறந்து வந்து தூக்கணாங்குருவியின் கூட்டுக்குள் நுழைந்துகொண்டது.

சிறிது நேரத்தில் ஒரு தூக்கணாங்குருவி பறந்து வந்தது. கூட்டுக்குள் தலையை நுழைத்தது. கூட்டுக்குள் சிட்டுக்குருவி இருப் பதைப் பார்த்துவிட்டு, "குருவி அக்கா. எங்கள் வீட்டில் நுழைந்து எனக்கு இடமில்லாமல் பண்ணிவிட்டாயே. தயவுசெய்து வெளியே போய் விடு" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டது.

"போடி போ. உன்னால் முடிந்ததை பார்த்துக் கொள். இனிமேல் இது என் வீடு. நான் இதை விட்டுப் போகமாட்டேன்" என்று குருவி மறுத்து விட்டது.

தூக்கணாங்குருவி அங்கிருந்து வருத்தத்துடனும், யோசனையுடனும் பறந்து போனது.

சிட்டுக்குருவி, கூட்டில் ஹாயாக உட்கார்ந்து "அப்படிப்போடு.. அப்படிப்போடு" என்று ஜாலியாகக் பாடிக் கொண்டிருந்தது.

திடீரென்று தூக்கணாங்குருவிகளின் கூட்டம் பறந்து வந்தது. ஒவ்வொன்றும் ஈரமண்ணை அலகில் கொத்தி வந்து, கூட்டின் வாசலைக் கொஞ்சம் கொஞ்சமாக அடைத்து பூசின. கூட்டின் வாசல் குறுகிக் கொண்டே போனது.

முதலில் சிட்டுக்குருவியின் கழுத்து, அப்புறம் தலைமட்டும், கடைசியாக அலகு என்று தெரிந்து கொண்டே வந்து, கடைசியில் ஒன்றுமே தெரியவில்லை. தூக்கணாங்குருவிகள், சிட்டுக்குருவியை கூட்டுக்குள் வைத்து ஒரேயடியாக அடைத்துப் பூசிவிட்டுப் பறந்து போயின.

அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால் இதுதான் கதி என்று தாமதமாக உணர்ந்த சிட்டுக் குருவி, அந்தக் கூட்டுக்குள்ளேயே மூச்சடைத்து இறந்து போனது.

# பெண்களின் அழகை கூட்டும் இயற்கை அழகு குறிப்புகள்....!

முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாற கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.


தலை முடி செழித்து வளர வெந்தயத்தை ஊற வைத்து நன்கு அரைத்து தலையில் பேக் போல போட்டு ஊறிய பிறகு தலைக்கு குளிக்க வேண்டும், இவ்வாறு செய்துவந்தால் பலன் தரும்.

சருமம் நிறம் அதிகரிக்க ஆப்பிள் விழுது இரண்டு டீஸ்பூன், பால்பவுடர் அரை டீஸ்பூன், பார்லி பவுடர் அரை டீஸ்பூன் மூன்றையும் கலந்து முகத்தில் போட்டு அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் மின்னல் போல மின்னும்.

கண்கள் பிரகாசமாக இருக்க இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவுதல் வேண்டும்.

கருவளையம் நீங்க ஆரஞ்சு பழத்தின் சக்கையை கண்கள் மீது அரைமணி நேரம் வைத்திருந்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் கருவளையம் காணாமல் போய்விடும்.

# குழந்தைகளின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் பெற்றோரின் விவகாரத்து



'திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்' என்பது பழமொழி. சமூகத்தில் திருமணம் என்பது ஒரு தனிப்பட்ட விஷயமல்ல. திருமணம் இரண்டு குடும்பங்களை ஒன்றிணைக்கிறது. திருமணங்கள் மூலம் உறவுகள் வலுப்படுத்தப்பட்டு சமூக ஒருமைப்பாடு பேணப்படுகிறது.

சமூக வளர்ச்சிகளுக்கும், மாற்றங்களுக்கும் ஏற்ப மணமுறைகளில் பல மாறுதல்கள் தோன்றின. மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்கின்றன. சமகால நடைமுறைகள், தனிப்பட்ட தேர்வு மற்றும் தனிப்பட்ட விருப்பங்களுக்கு முக்கியத்துவம் தருவதாக அமைந்துள்ளன.

தற்காலத்தில் பெரும்பாலும் இணையத்தின் வாயிலாக திருமணங்கள் முடிவு செய்யப்படுகின்றன. மிகவும் ஆடம்பரமாக நிறைய செலவுகள் செய்து புதுமையான முறையில் திருமணங்கள் நடைபெறுகின்றன. ஆனால் விரைவிலேயே சில தம்பதியர் உறவில் விரிசல் ஏற்பட்டு விவாகரத்தில் முடிகிறது. தேவையற்ற சிறிய பிரச்சினைகள், நீயா நானா என்ற ஈகோ போன்ற அர்த்தமற்ற காரணங்களால் ஏற்படும் விவாகரத்துகளும் கவனிக்கப்பட வேண்டியவை.

நமது குடும்ப அமைப்பு மிக அழகானது. குழந்தைகளுக்கான நல்ல பாதுகாப்பான சூழல் இதைவிட வேறு எங்கும் கிடையாது. அதை தக்க வைத்துக் கொள்வது அவசியம் என்பதை உணர்ந்து கொண்டாலே பெரும்பாலான விவாகரத்துகள் தவிர்க்கப்படும்.

சமீபத்திய ஆய்வுகள் ஓர் அதிர்ச்சியூட்டும் புள்ளி விவரத்தை வெளிப்படுத்துகின்றன: விவாகரத்து பெற்ற பெற்றோரின் குழந்தைகள் பிற்கால வாழ்க்கையில் பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை 61 சதவீதத்துக்கு அதிகமாக எதிர்கொள்கின்றனராம்.

பெற்றோரின் விவாகரத்து, குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் நீடித்த விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. அத்துடன் குழந்தைகளிடையே பெரும்பாலும் நாள்பட்ட மன அழுத்தத்தை தூண்டுகிறதாம்.

அன்றாட வழக்கத்தில் குறிப்பிடத்தக்க இடையூறை அனுபவிக்கும்போது உடலின் மன அழுத்த ஹார்மோனான கார்டிசோலின் அளவு அதிகரிக்க வழிவகுக்கப்படுகிறது எனவும் கூறப்படுகிறது., பெற்றோரின் விவாகரத்தை எதிர்கொள்ளும் குழந்தைகள் பெரும்பாலும் உணர்ச்சிக் கொந்தளிப்பை அனுபவிக்கிறார்களாம்.

மன அழுத்தம் நாள்பட்டதாக மாறும்போது உடல் வீக்கம், ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பிற நீண்டகால சுகாதார பிரச்சினைகளைத் தூண்டுகிறதாம். அவை இதயநோய்கள், பக்கவாதம் மற்றும் வளர்சிதை மாற்றக் கோளாறுகள் போன்ற பிரச்சினைகள் வரக் காரணமாகலாம் எனப்படுகிறது. கார்டிசோலின் அளவு அதிகரிக்கும்போது அது இதயம் மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தை பாதிக்கும். தொடர்ந்த மனஅழுத்தம் குழந்தைகளின் உறக்க முறையை பாதிக்கலாம். இது நிலைமையை மேலும் சிக்கலாக்கும்.

ஆய்வுகளின்படி, விவாகரத்து பெற்ற பெற்றோரின் குழந்தைகள் கவலை, மனச்சோர்வு மற்றும் நம்பிக்கையின்மை போன்ற பிரச்சினைகளாலும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாம். இது உணர்ச்சி, மன உளைச்சல் மற்றும் உடல் ஆரோக்கிய பிரச்சினைகள் இரண்டிற்கும் பங்களிக்கிறது. உதாரணமாக மனச்சோர்வு, இதயநோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் பிற நாட்பட்ட நோய்களுடன் நேரடியாக தொடர்புடையது.

சிறந்த மருத்துவ சிகிச்சை முறைகள், குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளை ஆரோக்கியமான வழியில் வழிநடத்த உதவும் என்பது மருத்துவர்கள் கருத்து. சரியான சிகிச்சை, மன அழுத்தம் தொடர்பான நோய்களுக்கு காரணமான நீண்டகால உணர்ச்சி அடக்குமுறையைத் தடுக்கிறது.

கடினமான சூழ்நிலைகளை சிறப்பாக நிர்வகிக்கவும் அவர்களால் முடியும். குழந்தைகள் தங்கள் ஆரம்ப ஆண்டுகளில் எதிர்கொண்ட கஷ்டங்கள் இருந்தபோதிலும் ஆரோக்கியமான, நிறைவான வாழ்க்கையை வாழ முறையான சிகிச்சை முறைகளால் சாத்தியமாகலாம்.

பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல ஆதரவு தந்து அவர்கள் தங்களால் நேசிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்த்தவேண்டும். தியானம் போன்றவை மன அழுத்தத்தின் விளைவுகளைத் தணிக்க உதவும். பெற்றோர்கள் விவாகரத்து செய்ய தீர்மானிக்கும் முன் குழந்தைகளின் உடல் நலனை கருத்தில் கொண்டு முடிவெடுப்பது நல்லது.



# எந்தப் பிரச்சினைக்கு என்ன கீரை?

### இரத்த சோகையை விரட்டும் முருங்கை

முருங்கை மரத்தில் கிடைக்கும் அனைத்தும் உடலுக்கு ஆரோக்கியமே. அதிகச் சத்துக்கள் நிறைந்தது முருங்கைக் கீரை. அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய இந்தக் கீரை, மிகவும் குளிர்ச்சித்தன்மை கொண்டது.

இரும்புச்சத்தும் விட்டமின் சியும் சேர்ந்த கலவை, இரத்தத்தை உற்பத்தி செய்யும். இரத்த சோகை உள்ளவர்களுக்கு இது சிறந்த மருந்து. நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். வாரம் இருமுறை சாப்பிட்டுவந்தால், முடி உதிர்தல் நிற்கும். இளநரையைப் போக்கும். கண் பார்வைத் திறன் அதிகரிக்கும். உடல்சூடு தணியும். உடல்நலத்தை அதிகரிக்கும்.

### ஊட்டமளிக்கும் முளைக்கீரை

இந்த கீரை, பச்சை மற்றும் சிவப்பு நிறங்களில் கிடைக்கின்றன. இரண்டு வகைக் கீரைகளும் உடலுக்கு நல்லதுதான். இது குளிர்ச்சித்தன்மையுடையது. ஊட்டமளிக்கும் சத்துகள் இதில் மிகுதியாக உள்ளன.

கண்களுக்கு குளிர்ச்சியூட்டி பார்வையைத் தெளிவாக்கும். மாலைக்கண் நோய்க்கு சிறந்த மருந்து. மூளை வளர்ச்சிக்கு உதவும். சருமத்துக்குக் கவசமாகும். பசியைத் தூண்டும். உடல் எடை அதிகரிக்கும். பலவீனமாக இருப்பவர்கள், அதிக உடல் சூடு கொண்டவர்கள் மற்றும் பித்த உடல் உள்ளவர்கள் இந்தக் கீரையை தாராளமாகச் சாப்பிடலாம்.

### கண்களுக்கு பொன்னாங்கண்ணி

அனைத்து சூழல்களிலும் வளரும் தன்மைகொண்டதால், எந்தக் காலத்திலும் மிக எளிதாகக் கிடைக்கும். இதில் நிறைய வகைகள் இருந்தாலும் நாட்டுப் பொன்னாங்கண்ணியே சமையலுக்குப் பயன்படுகிறது. இந்தக் கீரை குளிர்ச்சித்தன்மை கொண்டது.

சிறு குழந்தைகளுக்கு கிட்டப்பார்வை பிரச்சினை இருந்தால், இதைத் தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிடுவதுடன், கண்களுக்குப் பயிற்சியும் செய்துவந்தால், பார்வைத்திறன் அதிகரிக்கும். கண்களில் நீர்வழிதல், கட்டி, தொற்று, மங்கலான பார்வை போன்ற கண் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளும் தீரும். மாலைக்கண் நோய்கூட குணமாகும். மூளை, நரம்புகள் சீராக இயங்கும். எலும்புகளும் வலிமை பெறும். சருமம் பொலிவுறும். கூந்தல் நன்றாக வளர உதவும்.

### மூலத்தை சரியாக்கும் பசளைக் கீரை

வருடம் முழுவதும் கிடைக்கக் கூடியது. நீர்ச்சத்து நிறைந்த கீரை. சிறுநீரைப் பெருக்கும், பசியைத் தூண்டும் வல்லமை பெற்றது. மூலநோய் பிரச்சினை இருப்பவர்களுக்கு பசளை மிகவும் நல்லது. ஆரம்பக்கட்டத்தில் இருப்பவர்களை, எந்த வித சிகிச்சைகளும் இல்லாமல், இந்தக் கீரையின் மூலமே குணப்படுத்திவிட முடியும். நீர்க்கடுப்பு, நீரடைப்பு குணமாகும். சருமப் பிரச்சினைகள் தீரும். நோய்த் தொற்றைப் போக்கும். வாய்ப்புண்களை ஆற்றும்.

### வயிற்றுப் பிரச்சினைக்கு வெந்தயக்கீரை

சிறிய இலைகளாக, சிறிய தண்டுகளுடன் இருக்கும் வெந்தயக்கீரை, இலேசான கசப்புச் சுவை கொண்டது.

இது, உடலின் பலத்தை அதிகரிக்கும். நோய் எதிர்பாற்றலை உருவாக்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் பிரச்சினையை குணமாக்கும். மாதவிடாய் கோளாறுகளை நீக்கும். வாயுப் பிரச்சினை குணமாகும். உடலில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்தி சீராகவைக்கும். வயிற்றுக் கோளாறுகளைப் போக்கும். உடல்சூடு தணியும். முகப்பரு தொல்லை, சருமப் பிரச்னைகள் குணமாகும். குடல்புண்களை ஆற்றும்.

வார இதழ் தேசியம் www.thesiyamnews.com THESIYAM

# விஜேவீர படுகொலை: நழுவும் என்.பி.பி. அரசு!

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான, விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஜே.வி.பி. யின் முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீரவின் படுகொலை தொடர்பாக, விசேட கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

ரோஹண விஜேவீரவின் படுகொலை தொடர்பாக, குற்றம்சாட்டப்பட்ட முக்கியமான ஒருவரான, மேஜர் ஜெனரல் அசோக தோரதெனிய, ஜே.வி.பியின் நிகழ்வு ஒன்றில் மங்கள விளக்கேற்றியிருக்கிறார்.

இப்பொழுது ஜே.வி.பி. ஆட்சியில் இருக்கின்ற நிலையில், அவரது படுகொலை தொடர்பாக, முறையான விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் என தயாசிறி ஜயசேகர கோரிக்கை விடுத்-திருந் தார்.

ஜே.வி.பி. இப்போது ஆட்சியில் இருந்தாலும், இந்த படுகொலை தொடர்பாக, விசாரணை நடத்துமாறு அந்த கட்சியை சாராத தயாசிறி ஜயசே-சகர கோரிக்கை விடுக்கிறார்.

ஆனால், ஜே.வி.பி. அரசாங்கம் இதனைச் சார்ந்த எந்த விசாரணைகளையும் முன்னெடுத்திருக்கவில்லை. அதுபற்றி வாய்திறக்கவும் இல்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஜே.வி.பி. யின் ஆயுதக் கிளர்ச்சியுடன் தொடர்புடைய சம்பவங்கள் குறித்த விசாரணைகளில் அக்கறை செலுத்தவில்லை என்பதே உண்மை.

ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர், காணாமல் போனவர்களின் குடும்ப ஒன்றியம் என ஒரு அமைப்பை உருவாக்கி நீதிக்கான போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

தென்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவாக, சீதுவரத்தொலுவ சந்தியில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டு, ஆண்டு தோறும் ஒக்டோபர் 27 ஆம் திகதி அங்கு நினைவு கூறல் நிகழ்வு இடம் பெறுகிறது.

கடந்த ஆண்டு அந்த நினைவுச் சின்னத்தில் நடந்த நிகழ்வில், பங்கேற்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரின் அந்த எதிர் பார்ப்பு பொய்யாகியது. அந்த நிகழ்வில் அநுரகுமார திசாநாயக்க பங்கேற்க வில்லை.

இதனால், ஜே.வி.பி. கடந்த காலத்தை மறக்க விரும்புகிறதா? மறைக்க விரும்புகிறதா? என்று கேள்வி எழுகிறது. 2004 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தில் ஜே.வி.பி. இடம்பெற்றிருந்தது.

அப்பொழுது பாராளுமன்றத்தில் ஜே. வி.பி. 39 ஆசனங்களை கைப்பற்றியி-ருந்தது. அந்த சமயத்தில், சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை, அழுத்தி பணிய வைக்கக்கூடிய நிலையில் ஜே.வி.பி இருந்தது.

விவசாய அமைச்சராக, இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும், கலாசார அமைச்சராக விஜித்த ஹேரத்தும் பதவி வகித்திருந்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் ரோஹண விஜேவீரவின் படுகொலை தொடர்பாக, முழுமையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஜே.வி.பி. அனுதாபிகள் பலர், வலியுறுத்தினர்.

கலாசார அமைச்சராக அப்போது இருந்த விஜித்த ஹேரத்திடம், பி.பி.சி. சிங்கள சேவையான சந்தேசய அதுபற்றிக் கருத்துக் கேட்டது.

அதற்கு அவர், தமது அரசாங்கம் ரோஹண விஜேவீரவின் படுகொலை குறித்த விசாரணைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப் போவதில்லை எனக் கூறி யிருந்தார்.

அதற்கான காரணத்தை அவர் கூறவில்லை. ரோஹண விஜேவீரவின், நாட்டுக்கான கொள்கைகளை முன்னெடுத்து செல்லப் போவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அப்போது அதுபற்றி கருத்து தெரிவித்திருந்த, 'ஹரய' என்ற சிங்கள வார இதழின் ஆசிரியர் ஞானசிறி கொட்டிகொட, கட்சி நிறுவுநரின் கொள்கைகளிலிருந்து, 180 பாகை விலகி வருவதால், கொலையாளிகளை நீதியின் முன்நிறுத்தும் விசாரணையைத் தொடங்க, ஜே.வி.பி. தயங்குகிறது என சுட்டி காட்டியிருந்தார்.இலங்கையில் இந்தியத் தலையீட்டைக் கடுமையாக எதிர்த்த ஒரு கட்சி, தமிழர் களின் சுதந் திரப் பே-ாராட்டத்தை நசுக்க, இப்பே ாது, இந்-தியாவின் மத்தியஸ்தத் தைக் கேட்பது எப்படி?" என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார். இந்தியாவின் உதவ-ியுடன் விடுதலைப் புலிகளை அழிப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, ஜே.வி.பி. அந்த தருணத்தில் கூறி வந்தது.

அதனை அடிப்படையாக வைத்தே, அவர் அந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார். 21 ஆண்டுகள் பிறகும், ஜே.வி.பி. அதே நிலைப்பாட்டில் தான் இருக்கிறது. இப்பொழுது ஜே.வி.பி.யிடம் வெளிப்படையான இந்திய எதிர்ப்பு நிலைப்பாடும் கிடையாது.

ரோஹண விஜேவீரவின் படுகொலையை விசாரணை செய்யவேண்டும், குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பு உணர்வும் அதனிடம் இல்லை

தமது கட்சியின் நிறுவுநரான, ரோஹண விஜேவீரவின் படுகொலைக்கு காரணமானவர்களை கண்டறிந்து, தண்டிக்க நடவடிக்கை எடுக்க விரும்பாத இந்த அரசாங்கம், தமிழர்களுக்கு அநீதி இழைத்தவர்களைக் கண்டறிந்து, தண்டிக்க நடவடிக்கை எடுக்குமா என்ற ஒரு கேள்வி இங்கு நியாயமானது.

ரோஹண விஜேவீரவின் கொலை தொடர்பாக, ஜே.வி.பி. ஏன் விசாரணைகளை முன்னெடுக்க தயங்குகிறது?

அந்தப் படுகொலையுடன் தொடர்புடையவர் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர், ஜே.வி.பி.யின் நிகழ்வு ஒன்றில், மங்கள விளக்கேற்றுகின்ற அளவிற்கு, அந்தக் கட்சி மாறிவிட்டதா?

அப்படியானால், 21 ஆண்டுகளுக்கு முன்னர் ஹரய இதழின் ஆசிரியர், ஞானசிறி கொட்டிகொட குறிப்பிட்டது போல, ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டில் இருந்து, தலைகீழ் மாற்றத்தை அடைந்து விட்டது என்பது தான் உண்மை.

கண்டி, உலப்பனவில் உள்ள ஒரு வீட்டில், தனது குடும்பத்தினருடன் நிமல் கீர்த்திசிறி அத்தநாயக்க என்ற பெயருடன், வாழ்ந்து கொண்டிருந்த ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீர, 1989 ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த ஜே.வி.பி.யின் முக்கிய உறுப்பினர்களான எச்.பி.ஹேரத் மற்றும் பியதாச ரணசிங்க ஆகியோர் கலஹாவில் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்ட போது, எச்.பி.ஹேரத், விஜேவீரவின் இருப்பிடத்தை காட்டிக் கொடுத்தார். பின்னர், இவரே விஜேவீரவைச் சுட்டுக் கொன்றார் என்றும், அவரை படையினர் சுட்டுக் கொ ன்றுவிட்டனர் என்றும் அப்போது பா துகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன தெரிவித் திருந்தார்.

ரோஹண விஜேவீரவை கைது செய்யச் சென்றவர், கேணல் ஜனக பெரேரா. அவர் அந்த வீட்டிற்குச் சென்று அழைத்த போது, குட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி, தாடி சவரம் செய்யப்பட்ட தோற்றத்துடன் காணப்பட்ட விஜேவீரவை பார்த்து, தாங்கள் ஏமாறறப்பட்டு விட்டோம் என்று கேணல் ஜனக பெரேரா குழம்பி விட்டார். அந்தளவிற்கு அவர் தனது தோற்றத்தை மாற்றியிருந்தார்.

ரோஹண விஜேவீரவைக் கைது செய்த கேணல் ஜனக பெரேரா, பின்நாளில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் நட்சத்திர நிலைத் தளபதிகளில் ஒருவராக விளங்கியவர் என்பதுடன், அநுராதபுரத்தில் 2008இல் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மரணமானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட ரோஹண விஜேவீரவின் இறுதித் தருணங்கள் தொடர்பாக, இராணுவ பொலிஸ் படைப்பிரிவில், புகைப்படப் பிடிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற லான்ஸ் கோப்ரல் இந்திரானந்த டி சில்வா, 2014 ஆம் ஆண்டு சிலோன் டுடே ஆங்கில நாளிதழுக்கு விரிவான செவ்வியை வழங்கியிருந்தார்.

ஜே.வி.பி. அனுதாபியான அவர், ரோஹண விஜேவீர, எப்படி விசாரிக்கப்பட்டு, சுடப்பட்ட பின்னர், உயிருடன் தகரமேடைக்குள் தூக்கி வீசப்பட்டு எரிக்கப்பட்டார் என்பதை விபரித்திருந்தார்.

கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட விஜேவீர, கூட்டு நடவடிக்கை பணியகத்தில் இரவிரவாக வைத்து விசாரிக்கப்பட்டார்.

அவரை விசாரித்த அதிகாரிகள் குழுவில் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, பிரிகேடியர்களான லக்கி அல்கம மற்றும் ஜயசுந்தர, கேணல்களாக ஜவன் தசநாயக்க, லயனல் பலகல்ல, கேணல் ஜனக பெரேரா, கெப்டன் களான காமினி ஹெட்டியாராச்சி, முத்தலிப், வீரசிங்க, அபேநாயக்க, அசோக தோரதெனிய ஆகியோரும் இருந்தனர்.விஜேவீரவின் படங்கள் எடுக்கப்பட்டு, அவரது வாக்குமூலம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது.

20 நிமிடங்களுக்குப் பின்னர், கேணல் ஜவன் தசநாயக்க, மேஜர் தோரதெனிய மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ரோனி குணசிங்க உள்ளிட்ட ஐந்து அல்லது ஆறு பேரை, மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன அழைத்து ஏதோ கூறினார்.

அதன் பின்னர், கார் ஒன்றில் விஜேவீர ஏற்றிச் செல்லப்பட்டார். மேஜர் தோரதெனிய ஒரு வாகனத்தில் சென்றார். ரோனி குணசிங்க மற்றொன்றில் ஏறினார். மேஜர் உடுகம்பொலவும் அதில் ஏறினார்.



கெப்டன் முத்தலிப் மற்றும் குறிப்பிட்ட படையினர் வாகனங்களில் ஏறினர்.

கோல்ப் மைதானத்தில் வைத்து நெஞ்சில் சுடப்பட்ட ரோஹண விஜேவீர, அரை குறை உயிருடன் இருந்த போது, தேவி பாலிக வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள எரிவாயு தகனசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

அதன் பராமரிப்பாளரிடம் சாவியை கேட்டனர். அவர் அதற்கு மறுத்த போது, "சாவி யை கொடு நாயே இல்லை என்றால் சுட்டு விடுவேன்" என மேஜர் தோரதெனிய துப்பாக்கியை எடுத்து மிரட்டினார்.

அவர் சாவியை கொடுக்க உள்ளே கொண்டு சென்று தகன மேடையில் இரண்டு பேர் விஜேவீரவைத் தூக்கி வீசினர்.

சுவரில் பட்டு கீழே விழுந்த போது ரோஹண விஜேவீர முனகிக் கொண்டிருந்தார். அவர் இறக்கவில்லை என்பது அங்கிருந்தவர்களுக்கு தெரியும்.

அப்பொழுது கப்டன் முத்தலிப், "உங்களுக்கு சரியாக வேலை செய்ய தெரியாதா" என்று கத்தினார். அதன்பின் தூக்கி உள்ளே வீசினர். இப்படித்தான் ரோஹண விஜேவீர உயிருடன் எரித்து படுகொலை செய்யப்பட்டார் என்று விபரித்துக் கூறியிருந்தார்.

லான்ஸ் கோப்ரல் இந்திரானந்த டி சில்வா. இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கூறப்பட்ட இராணுவ அதிகாரிகள் பலர் இப்பொழுது உயிருடன் இல்லை. கேணல் முத்தலிப் 2005ஆம் ஆண்டு கொழும்பில் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேஜர் ஜெனரல் தோரதெனிய இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாலைதீவுக்கான தூதுவராக பணியாற்றியிருந்தார்.

சரத் பொன்சேகா இராணுவதளபதியாக இருந்த போது, இராணுவ தளபாடக் கொள்வனவில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட மேஜர் ஜெனரல் தோரதெனிய இராணுவ நீதிமன்றத்தினால் விசாரணைக் உட்படுத்தப்பட்டவர்.

அவர், ஜே.வி.பி நிகழ்வு ஒன்றில் மங்கல விளக்கு ஏற்றியது ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது.

பழைய விடயங்களை கிளறினால் தாங்களும் பதில் கூற வேண்டிய நிலை வரும் என்ற அச்சம், இப்போதைய ஆட்சியாளர்களுக்கு இருக்கிறதோ தெரியவில்லை.



# நிலமிழந்து –பலமிழந்து

## தாயக கொள்கையை கைவிடுகிறார்களா? குர்திஷ் போர்நிறுத்த அவசியம் என்ன?

*- ஐங்கரன் விக்கினேஸ்வரா*

(துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் போர் நிறுத்தத்தை அறிவித் துள்ளனர். நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி)

தனிநாடு கோரி போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே-க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக் கணக்கான இறப்புகளுக்கு வழிவகுத்தது.

கடந்த வாரம் 27/2/25 குர்திஷ் அரசியல் குழு, பி.கே.கே அமைப்பு தனது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தார்.

### எல்லை தாண்டி அழித்த துருக்கி:

நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி. சிரியாவில் கடந்த ஆண்டு இறுதியில் குர்திஷ் போராளிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான் வழியாகவும் துருக்கி ராணுவம் தாக்குதல் நடத்தியதால் பாரிய அழிவை அவர்கள் சந்தித்தனர்.

நாற்பது ஆண்டுகால கிளர்ச்சியை நடத்தி வரும் குர்திஷ் போராளிகள், தங்கள் சிறையில் அடைக்கப்பட்ட தலைவரால் போராட்ட அமைப்பை நிராயுதபாணியாக்க அழைப்பு விடுத்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு சனிக்கிழமை குர்திஷ் போராளிகள் போர்நிறுத்தத்தை அறிவித்தனர். குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே.கேஷியின் போர் நிறுத்த அறிக்கையை அக்குழுவிற்கு நெருக்கமான ஊடக நிறுவனமான ஃபிரத் செய்தி நிறுவனம் வெளியிட்டது.

1999 முதல் துருக்கியால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அப்துல்லா ஓஜலனைப் பற்றி குறிப்பிடுகையில், அந்தக் குழு கூறியது: "தலைவர் அப்துல்லா ஓஜலான் அமைதி மற்றும் ஜனநாயக சமூகத்திற்கான அழைப்பை செயல்படுத்துவதற்கு வழி வகுக்கும் வகையில் இன்று முதல் போர்நிறுத்தம் அமலுக்கு வருவதாக அறிவித்துள்ளார்.

துருக்கியால் தாக்கப்படாவிட்டால் எங்கள் படைகள் எதுவும் ஆயுதமேந்திய நடவடிக்கை எடுக்காது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2015 கோடையில் பி.கே.கே மற்றும் துருக்கி படைகள் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததிலிருந்து, அமைதிக்கான முதல் அறிகுறியாக இந்த போர் நிறுத்தம் உள்ளது.

குர்திஷ்தான் மற்றும் மத்திய கிழக்கில் ஒரு புதிய வரலாற்று செயல்முறை தொடங்கியுள்ளது என்பதை ஓஜலனின் அறிக்கை சுட்டிக்காட்டுவதாக பி.கே.கே தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.



### குர்திஷ்தான் பூர்வீக தாயகம்:

குர்திஷ்தான் என்பது துருக்கி, ஈராக், சிரியா மற்றும் ஈரானின் குர்துகள் வசிக்கும் பகுதிகளைக் குறிக்கிறது.

பி.கே.கேஷியின் தலைவர் அப்துல்லா ஓஜலான், 1999ல் இருந்து சிறையில் இருக்கிறார். எனினும் குர்திஸ் அமைப்பு தொடர்ந்து போராடி வருகிறது. பல அமைதி ஒப்பந்தங்கள் பயனற்றுப் போன நிலையில், சிறையில் இருக்கும் அப்துல்லாவை சமீபத்தில் துருக்கி அரசியல் தலைவர்கள் சந்தித்து, வன்முறையை கைவிடும்படி கோரினர்.

இந்த நிலையில், ஆயுதங்களை கைவிடுவதாக குர்திஷ் பி.கே.கே அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

குர்திஷ் அமைப்பைச் சேர்ந்த யாரும் ஆயுத தாக்குதலில் ஈடுபட மாட்டார்கள். துருக்கி, ஈராக், ஈரான், சிரியாவை உள்ளடக்கிய குர்திஷ் பிராந்தியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் புதிய வரலாறு எழுதப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துருக்கியில் அதிபர் எர்டோகன் பதவிக் காலம் 2028ல் முடிகிறது. அதன் பிறகும் பதவியில் தொடரும் வகையில் சட்டத்தை திருத்த குர்திஷ் ஆதரவு தேவைப்படுவதால், அவரது முயற்சியில் இந்த போர் நிறுத்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

அத்துடன் சிரியாவில் அதிபராக இருந்த பஷிர் ஆசாத்தின் ஆட்சி கவிழ்ப்பு, லெப னானில் ஹெஸ்பெல்லா அமைப்பு பல வீனமானது போன்ற காரணங்களும், குர்திஷ் போராளிகளின் போர் நிறுத்த முடிவுக்கு காரணமாகக் கூறப்படுகிறது.

### காவு வாங்கப்படும் கனவு தேசம்:

சிரியாவில் பஷிர் ஆசாத் ஆட்சி வீழ்ச்சியின் பின்னர், குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால் அங்கும் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக் களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும், ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக் குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந் நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக் கின்றன என்பது உண்மை தான்.

### தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள்:

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர் கொண்டுள்ளனர்.

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான். 2011 இல் சிரியாவின் உள்நாட்டுப் போர் வெடித்த பிறகு, நவம்பர் 2103 இல் குர்திஷ் படைகள் வடகிழக்கு சிரியாவின் சில பகுதிகளில் சுயாட்சியை அறிவித்தன.

அங்கு அவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சுமார் 30 மில்லியன் குர்திஷ் மக்கள் வடக்கு ஈராக், மேற்கு ஈரான், வடக்கு சிரியாவில் பரவி உள்ளனர். மேலும் துருக்கியின் மக்கள் தொகையில் சுமார் 18% பேர் உள்ளனர்.

### ஐந்து நாடுகளில் சிதறிய குர்திஷ்தான்:

குர்திஷ்தான் தாயகமானது ஈராக், ஈரான், சிரியா, துருக்கி, ஆர்மேனிய நாடுகளுக்குள் ஒவ்வொன்றுடனும் இணைந்தவாறு, அந்தந்த நாடுகளின் எல்லைப் பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. குர்திஷ் மக்கள் வாழும் இந்த மலைப்பகுதிகளை இணைத்து 'குர்திஷ்தான்' எனும் தனி நாடு காண விரும்புகிறார்கள்.


முதலாம் உலகப்போருக்குப் பின்னர் ஓட்டோமான் சாம்ராஜ்யம் வீழ்ந்ததையடுத்து நடைபெற்ற 'வெர்சாய்ஸ்' சமாதான மாநாட்டில் குர்திஷ்தான் கோரிக்கை முதலில் முன்மொழியப்பட்டது.

இதையடுத்து, முதலாம் உலகப்போரில் வெற்றிபெற்ற மேற்கத்திய கூட்டுப்படையினர் சுவிட்சர்லாந்தில் கூடி, 'செவ்ரெஸ் ஒப்பந்தம்' கொண்டுவந்தனர். 1920ல் கொண்டுவரப்பட்ட அந்த ஒப்பந்தத்தில், ஐந்து நாடுகளிலும் உள்ள பகுதிகளை சேர்க்காமல், துருக்கியில் மட்டும் உள்ள பகுதியில் 'குர்திஷ் தேசம்' ஒன்று உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், 1923ம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளுடன் கையெழுத்தான 'லாவ்சன்னே' ஒப்பந்தத்தின்படி நவீன துருக்கியின் எல்லைகள் வரையறுக்கப்பட்டபோது குர்திஷ் தேசம் உருவாக்கப்படவில்லை என்பது வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களாகும்.

ஆனால் தற்போது குர்திஷ் பி.கே.கே அமைப்பின் அரசியல் குழுவானது ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தமை உள் நோக்கம் கொண்டதாக அறியப்படுகிறது.

ஐந்து நாடுகளில் சிதறிக் கிடக்கும் குர்திஷ் மக்களின் தாயகக் கனவு நனவாகாமல், கலைந்த கனவாக மாறிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.



# ஏப்ரல் 25க்குப் பின் உள்ளூராட்சித் தேர்தல்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

எப்ரல் 25ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இம்முறை தேர்தலுக்கான செலவு 11 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைப் போலவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிக்கான செலவு வரம்புகள் நிர்ணயிக்கப்படவுள்ளன. இதனிடையே வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 35 முதல் 49 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கமைய எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# குற்றவியல் சட்டக் கோவை இருக்கும் போது

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மக்களை அச்சமூட்டவா

### – சபா குகதாஸ் கேள்வி!

இலங்கை அரசியலமைப்பில் உள்ள குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவை இருக்கும் போது அதற்கு மேலதிகமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதற்கு? கடந்தகால ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்ற முயற்சிப்பதன் உள் நோக்கம் என்ன? என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்தவாரம் அவர் வெளியிட்ட ஊடகா அறிக் கையிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளீன் சிறிலங்கா என்பது விளம்பர அரசியலா? சகல இன மக்களையும் இன நல்லிணக்கத்துடன் வழி நடத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதை தவிர்த்து மக்கள் அச்சப்படும் பெயர் மாற்றுப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் எதற்கு?

கடந்த கால ஆட்சியாளர்கள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவர முனைந்த போது கடுமையாக எதிர்த்த அநுர தரப்பு தற்போது அதனை கையில் எடுப்பது ஏன்? அன்று எதிர்த்ததும் அநுரவின் அரசியலா?

சிஸ்டம் சேஞ் என்பது அநுர அரசின் தேர்தல் கால அரசியலா என மக்கள் மத்தியில் கேள்விகள் எழ ஆரம்பித்துள்ளன எனவே நாட்டில் குற்றச் செயல்களுக்கான தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தங்களை ஏற்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனையை வழங்குவது தான் நாட்டு மக்களிடையே அச்சம் மற்றும் சந்தேகம், பயம் போன்றவற்றை இல்லாது ஒழிக்க முடியும் என தெரிவித்தார்.

## பிள்ளைகளை...

போராட்டம் நிறைவடைந்திருந்தது.

போராட்டத்தின் போது சர்வதேசமே பதில் சொல், சர்வதேசமே எமக்கான தீர்வு என்ன! பிள்ளைகளைத் தினம் தேடிக்கொண்டே நீதியின்றி இறந்து கொண்டிருக்கின்றோம். கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம்! எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும், தமிழரை கடத்தாதே!, இன அழிப்பு செய்யாதே!. உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள்ளைகளுக்கு என்ன கல்விக் கூடமா?, எமது நாட்டில் நாம்வாழ உரிமையில்லையா?, உலகமெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளிலும் தெருவில் கிடந்து அழவைத்திருக்கிறது அரசு, போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

## சர்வதேசப்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்தவின் ஆட்சியில் மக்கள் விடுதலை முன்னணி இராணுவத் தீர்வைத் தீவிரமாக ஆதரித்தது. அவ்வாறான நிலையில் உண்மையில் இந்த அரசாங்கம் பொறுப்புக் கூறும் செயன்முறைக்கு ஆதரவளிக்குமா? என்ற சந்தேகம் காணப்படுகிறது.

இனமோதல்கள் தொடர்பில் வெளிவிவகாரத்துறை அமைச்சு பிரதான பங்கு வகிக்கின்றது. அதாவது கடந்தகாலங்களில் பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் பலபொய்களும் பரப்பப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கம் வருவதற்கு முன்னர் இந்த அமைச்சு அவ்வாறுதான் இருந்தது. தமிழ் மக்கள் உரிமைகளைக் கோரும் போது அது தொடர்பான போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று குறிப்பிட்டு இந்த அமைச்சின் ஊடாகவே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் அந்த நடவடிக்கைகளை மாற்றியுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின் என்ன நடந்தது என்று ஆராய வேண்டும். அந்த நடவடிக்கை நம்பகத்தன்மையானதாக இருப்பதற்கு உள்நாட்டு பொறிமுறை தீர்வாக அமையாது. சகலவற்றையும் உள்ளடக்கிய பொறிமுறையும், விசாரணைச் செயன்முறைகளும் முன்னெடுக்கப்படவேண்டும். இதுவே குறைந்தப்பட்சத் தகுதியாக இருக்கின்றது.

ஆகவே கடந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த போக்கினைத் தற்போதைய அரசாங்கம் தொடரக்கூடாது - என்றார்.

## கனடாவில்...

நிலையில் ஹரிணி ஆனந்தசங்கரி குறித்த பதவிகளை ஏற்றுள்ளார்.

இந்த நிலையில் இலங்கை வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் ஹரி ஆனந்த சங்கரிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இதனை எமது நாடு பெருமையாகக் கருதுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை இலங்கையின் மூத்த தமிழ் அரசியல்வாதியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரியின் இளைய புதல்வ-ரேஹரி ஆனந்தசங்கரி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இனமுறுகலை...

தெரிவித்துள்ள கருத்து தண்டனைக்குரிய குற்றமாகும். தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே இருக்கும் ஒற்றுமையைக் குலைத்து இனமுறுகலை ஏற்படுத்த அவர் முனைகின்றார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண முஸ்லிம்களின் ஒன்றிய அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வருத்தம் தெரிவித்திருந்தது. அவ்வாறிருக்கையில் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் “விடுதலைப் புலிகளின் தலைவர் யாழ்ப்பாண முஸ்லிம்களை விரட்டியது தவறு, அவர்களை இங்கே வைத்து சீமெந்து பூசியிருக்க வேண்டும்” என்று விசத்தைக் கக்கியுள்ளார். இவரின் கருத்து ஒட்டுமொத்த யாழ்ப்பாண முஸ்லிம்களையும் சமாதி ஆக்கியிருக்க வேண்டும் என்பதே.

ஒரு இனத்தையே படுகொலை செய்திருக்க வேண்டும் என்ற ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்திருக்கும் கருத்து தண்டனைக்குரிய குற்றமாகும். ஒரு மருத்துவராக பல உயிர்களைக் காக்கவேண்டிய பொறுப்பில் உள்ள இவரது கேவலமான பேச்சு, முஸ்லிம் இனத்தையே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் முஸ்லிம் மக்களை இலக்கு வைத்தும், முஸ்லிம் மார்க்க விடயங்களில் விசமத்தனமான கருத்துகளையும் அண்மைக் காலமாக நாடாளுமன்றத்தில் தெரிவித்து வருகின்றார். இவரது கருத்துக்கள் அனைத்தும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினரின் அடாவடித் தனத்தை அரசாங்கம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். நாடாளுமன்றம் என்பது மக்களுடைய அபிவிருத்தி, உரிமைகள் தொடர்பாக விடயங்கள் பேசப்பட வேண்டிய இடம். ஆனால் இப்போது இனவாதமே கூடுதலாகப் பேசப்படுகின்றது. நாட்டின் அமைதிக்குக் குந்தகம் விளைக்கும் இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

## ஸ்ரீலங்காப்...

நடவடிக்கைகளை முன்னெடுத்தன. ஆனால் தாங்கள் இனவாதிகள் இல்லை எனக் கூறிக் கொண்டு இந்த அரசாங்கம் இனவாதிகள்போல் செயற்படுகின்றது. தமிழ் மக்களுக்குத் தரவேண்டிய அரசியல் தீர்வை தர மறுக்கின்றார்கள். தமிழ் மக்கள் தொடர்பிலும், பொறுப்புக்கூறல் சம்பந் தமாகவும் ஒரு வார்த்தைகூட வெளிவிவகார அமைச்சரால் சொல்லப்படவில்லை. அநுராதபுரத்தில் நடந்த சம்பவத்தைக் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆனால் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு, கொல்லப்பட்டனர். இசைப்பிரியா கொல்லப்பட்டது ஓர் உதாரணம். இசைப்பிரியா உயிருடன் இருந்தார் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் இருந்தன. அதன்பின்னர் அவர் கொடுமைப்படுத்தப்பட்டு, நிர்வாணப் படுத்தப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். அவருக்கு நீதிதேவையில்லையா?’ - என்றார்.

## தமிழர்களின்...

தற்போது யாழ்ப்பாணத்தைப் பார்த்துப் பலரும் அதிசயிக்கின்றனர். பாரம்பரியத்தின் உச்சம் யாழ்ப்பாணத்தில் தற்போது வரை பேணப்பட்டு வருகிறது. தில்லையில் எவ்வாறு நீண்டகாலம் திருமுறைகள் பேணப்பட்டு வந்தனவோ அதே போன்று தற்போது எங்கள் மண்ணில் இந்துக்கலைகளையும், தமிழையும், வாழ்வியல் சைவநெறியையும் பேணுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடம் கிடைத்திருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறள் இதுவரை காலமும் பேணிப்பாதுகாக்கப்பட்டு தற்போதைய தலைமுறையும் படிக்கக் கிடைத் திருப்பது பெரிய மர்மம். இது இறைவனுடையதொரு ஏற்பாடு.

எமது வாழ்வில் கொண்டாட்டங்களை நாம் கொண்டாடுவது மிகவும் முக்கியம். அதற்குரிய அர்த்தங்கள் எங்கள் உள்ளக் கிடக்கைகளைத் திறக் கும்போது வந்து சேரும். எங்கள் சஞ்சலங்களைத் தீர்ப்பதற்காகவே எமது முன்னோர்கள் கலைகளை அமைத்தார்கள். எனவே எங்கள் மரபுரிமையைப் பேணுவதற்குச் சுயசிந்தனையுடன் நாங்கள் ஒவ்வொருவரும் செயற்படுவது அவசியமானது - என்றார்.

## தொடர்கதையாக...

40 ஆயிரம் கால்நடைகளும், வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 30ஆயிரம் கால்நடைகளுமாக, வன்னிப் பகுதியில் மொத்தமாக ஏறக்குறைய 3 இலட்சத்து 70 ஆயிரம் கால்நடைகள் காணப்படுகின்ற நிலையில் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை இல்லாத சிக்கலான நிலமை காணப்படுகின்றது. இதனால் கால்நடைகளை வீதிகளின் இருமருங்கிலும் மேயவிடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்தச் சிக்கல். நிலைமைகளைக் கருத்தி கொண்டு கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரவை நிலங்களை ஒதுக்கித்தர வேண்டும் - என்றார்.

## புலிகளுக்கு...

கிறது. நாட்டில் கொலை கொள்ளை கலாசாரத்தை ஜே.வி.பிதான் முதன் முதலில் ஆரம்பித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஜே.வி.பி. தான் இவற்றைக் கற்றுக் கொடுத்தது. 1984, 1985களில் ஜே.வி.பி.யில் இருந்து கொண்டு அதன் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காதவர்கள் அந்தக் கட்சியினராலேயே கொல்லப்பட்டனர்.

எனவே தற்போது நாட்டில் இடம் பெற்று வரும் துப்பாக்கிச்சூடுகள் வாள்வெட்டுக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய இயலுமையும் அனுபவமும் ஜே.வி.பி.க்குக் காணப்படுகிறது.

தற்போதுள்ள அரசாங்கம் அதற்கு மிகப் பொருத்தமானதாகும். எனவே இந்தக் கொலை கொள்ளைக் கலாசாரத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## சர்ச்சையை...

அவர்களது பிரஜாவுரிமையை பறிப்பதற்கு தேவையான மேலதிக அதிகாரத்தை உயர் நீதிமன்றத்திற்கு வழங்குமாறு ஆணைக் குழு முக்கிய பரிந்துரையை முன்வைத்தது.
மேலும், நிறைவேற்றதிகாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்ற அச்சம் இல்லாததால் மீண்டும் மீண்டும் சட்டத்தை மீறியுள்ளதாகவும் ஆணைக்குழுவின் பரிந்துரையில் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**பட்டலந்த ஆணைக்குழு அறிக்கைக்கு என்ன நடந்தது?**

பட்டலந்த அறிக்கை அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டாலும் அதில் இருந்த பரிந்துரைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
தேர்தல் மேடைகளில் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை ஒரு தலைப்பாக மாறினாலும் நீதியை நிலைநாட்டுவதற்காக அது முன்வைக்கப்படவில்லை என்பது பெரும் குற்றச்சாட்டாக இருந்தது.
இந்த நிலையிலேயே, அப்போதையை பி.பி.சி. செய்தியாளராக இருந்த பிரான்ஸஸ் ஹெரிசன் அல் ஜசீரா நிகழ்ச்சியின் போது இந்த அறிக்கையை காண்பித்து ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.
குறிப்பாக, அரசாங்கத்தின் உத்தரவிற்கு அமைய இந்த அறிக்கை அச்சிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
ஆனால், இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பித்து எவ்வித அனுமதியும் பெற்றுக்கொள்ளாதமையால் இந்த குற்றச்சாட்டுகளை தான் முற்றாக நிராகரிப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.
இந்த நிலையிலேயே பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக இந்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் அதற்கமைய இந்தவாரத்திற்குள் பட்டலந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
பட்டலந்த அறிக்கை பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுமாக இருந்தால் அந்த அறிக்கையில் குற்றவாளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பலரின் குடியுரிமையும் பறிக்கப்பட வாய்ப்புள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.
எனினும், தற்போதைய அரசாங்கம் இந்த விடயத்தில் எந்தளவான தலையீடுகளை செய்யும் என்ற கேள்வியும் பெரிதளவு எழுந்துள்ளதாகவும் பல்வேறு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## தலைவர்...

அறிவித்தல்.

**உலகெங்கும் பரந்து வாழும்**
**எம் உயிரினும் மேலான தமிழ் மக்களே!**

எமது விடுதலை இயக்கத்தின் தலைவரும், தமிழினத்தின் ஒப்பற்ற பெருந்தலைவருமான தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், இறுதி வரை கொண்ட கொள்கையில் உறுதிதளராது, முப்பத்தாறு ஆண்டுகளாக எதிரிப் படைகளோடு அடிபணியாது போராடி நந்திக்கடலோரம் நடைபெற்ற இறுதிச்சமரில் வீரகாவியமானார்.
சிறிலங்கா அரசுக்கும் அதன் இராணுவ இயந்திரத்திற்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய உலகநாடுகளின் கூட்டுப்படை வலிமையையும் ஏகாதிபத்திய அரசுகளின் சூழ்ச்சித் திட்டங்களையும் எதிர்கொண்டு, அனைத்து தடைகளையும் தனது பேராற்றலால் உடைத்தெறிந்து தமிழினத்தின் ஆற்றலோனாக தேசியத் தலைவர் திகழ்கின்றார்.
தமிழினத்தின் தேசிய அடையாளத்தை நிலைநிறுத்தி, முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் வரையும் உறுதி குலையாது படை நடத்தி, தான் வரித்துக்கொண்ட உயரிய இலட்சியத்தையும் தனது வழிநடத்தலையும் உளமார ஏற்று, உயிர்களை விதையாக்கிய மாவீரர்களின் தியாகங்களையும் இலட்சியக்கனவளையும் நெஞ்சிருத்தி, எதிரிப்படையோடு நுதிக்கணம் வரை துணிவோடு களமாடி எமது தேசியத்தலைவர் அவர்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் என்பதனை தமிழீழ மாவீரர் பணிமனை அறியத்தருகிறது.
தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் வீரச்சாவினை உறுதிப்படுத்தி, நெஞ்சைப் பிளக்கும் இப்பெரும் துயர்மிகு அறிவிப்பை, அவரது வழிநடத்தலை உளமார ஏற்றுப் போராடிய போராளிகளுக்கும், ஒப்பற்ற தேசியத் தலைமையாக தமது நெஞ்சங்களில் சுமந்திருக்கும் எம்முயிரினும் மேலான தமிழ் மக்களுக்கும் பெருந்துயரத்தோடு வெளிப்படுத்திக் கொள்ளும் அதேவேளை, எமது வீரவணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
காலம் காலமாக அடிமை வாழ்வுக்குள் சிக்குண்டு சிதைந்து கொண்டிருந்த ஈழத் தமிழினத்திற்கு கிடைத்த ஒரு சூரியத் தேவனாக, இந்த நூற்றாண்டில் உலகமே வியக்கும் பல அற்புதமான வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து, தமிழினத்தின் அதிஉச்ச வீர அடையாளமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் திகழ்கின்றார். வரலாற்றிலிருந்து எவராலும் அழிக்கப்பட முடியாதவாறு, எதிரியாலும் போற்றப்படும் போரியல் அறத்துடனும் உயர்ந்த இராணுவ ஒழுக்கத்துடனும் தமிழர் மனங்களில் அவர் நிலைபெற்றுவிட்டார் என்பதால், செம்மொழியாம் எம் தாய்த் தமிழ்மொழி வாழும் காலமெல்லாம் எம்தேசத் தலைவரும் நிலைபெற்று நித்திய வாழ்வு வாழ்வார்.
தமிழினத்தின் கலங்கரை விளக்காக, தமிழ் மக்களை அடிமைத் தனத்திலிருந்து கரை சேர்க்கப் புறப்பட்டு, அடிமை விலங்குடைத்து, கொண்ட கொள்கையில் இறுதி வரை உறுதி தளராது போராடிய எமது தேசியத் தலைவர் அவர்களும் மாவீரர் வரிசையில் தன்னை இணைத்துக் கொண்டார். தமிழினத்தின் விடிவிற்காக தனது உயிரை அர்ப்பணித்த எமது தேசியத் தலைவருக்கு உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்று கூடி பேரெழுச்சியோடு நெஞ்சங்களில் இருத்தி, தமிழீழப் போராட்ட வரலாற்றின் மிகப்பெரும் அடையாளமாக எமது இதயக் கோயில்களில் வைத்து பூசிக்கப்படக் கூடியவராக்க வேண்டியது ஒவ்வொரு தமிழர்களதும் மிகப்பெரும் கடமையும் பொறுப்புமாகும்.
ஆகவே வரலாற்றில் எமக்கு கிடைத்த பொக்கிசமான எமது தேசத் தலைவருக்கு, தலைவரின் வழியில் களமாடிய போராளிகள், சமூக கட்டமைப்பினர், புலம்பெயர், தாயக மற்றும் தமிழக உறவுகள் என அனைவரும் ஒன்றிணைந்து அவரது வீரவணக்க நிகழ்வை தாயகம், தமிழகம் உட்பட தமிழ் மக்கள் பரந்துவாழும் உலகப்பரப்பெங்கிலும் நடாத்தும் அதேவேளை, அனைவரும் ஒன்றிணையக் கூடிய ஐரோப்பிய நாடொன்றிலும் 2025 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உலகம் போற்றும் வகையில்பேரெழுச்சியாக முன்னெடுக்கவுள்ளோம்.
எங்கள் பெருந் தலைவர் அவர்களால் கட்டமைத்து வளர்த்தெடுக்கப்பட்டு நமது கைகளில் தரப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, அதே உறுதிப்பாட்டுடனும் அதே கட்டுக் கோப்புடனும் அதே ஒருங்கிணைவுடனும் மாறிவரும் பூகோள அரசியல் மாற்றங்களுக்கேற்ப தடம் மாறாது முன்னெடுத்துச் சென்று எமது இறுதி இலட்சியத்தை அடைவோமென தமிழீழத் தேசியத் தலைவர் மீதும் மாவீரர்கள் மீதும் உறுதியெடுத்துக்கொள்கிறோம் - என்று உள்ளது.

## அநுர...

உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு விரைந்து செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.
எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் 6 ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்று பெற்றுக்கொடுப்பதாக கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம் எனவும் பேராயர் குறிப்பிட்டார்.
2025 ஜூபிலி ஆண்டை முன்னிட்டு கொழும்பு மறை மாவட்ட மக்கள் தொடர்பு மத்திய நிலையத்தினால் கொழும்பு பேராயர் இல்லத்தில் சனிக்கிழமை (15) ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறுகையில்,
நாட்டில் ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், மக்கள் சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றை நிலைநாட்டுவதற்கும், நாட்டில் புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகத் தான், நாம் உங்களுக்கு ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தோம்.
தற்போது உங்களிடம் உள்ள ஆட்சி அதிகாரத்தை வைத்துக்கொண்டு சட்ட திட்டங்களை திருத்துங்கள். அவற்றை திருத்துவதற்கு இனியும் காலவேளை தேவையில்லை. சட்டம் திருத்தப்பட வேண்டும் என கூறிக்கொண்டு இனியும் கால தாமதம் ஏற்படுத்தாதீர்கள்.
இந்நாட்டில் 1978 அரசியலமைப்பில் தனி ஒரு நபர் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தன்வசப்படுத்துவற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
இந்த 1978 அரசியலமைப்பின் பின்னர், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை, ஊடகவியலாளர்கள் காணாமலாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது. இவற்றுக்கு முழு காரணமும் அரசியல் தலைவர்கள் ஆவர்.
லசந்த விக்ரமதுங்க கொலை, பிரதீப் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீத் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட இன்னும் பல ஊடகயவியலாளர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் இல்லை. அவர்களுக்கு நீதியும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.
தற்போதுள்ள அரசாங்கமும் இந்த விடயங்கள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா குறித்து எனக்குத் தெரியாது. உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் குறித்தும் எமக்கு அதனையே கூற வேண்டியுள்ளது.
பலதரப்பட்ட வகையில் எமக்கு வாக்குறுதி அளித்தார்கள். வாக்குறுதிகளை மாத்திரம் வழங்கினர். எனினும், ஒரு வாக்குறுதியை கூட இதுவரை நிறைவேற்றவில்லை.
இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி, தேர்தல்களின் போது வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளே 1948 ஆம் ஆண்டிலிருந்து எமது அரசியல் தலைவர்கள் எமது நாட்டில் செய்து வருகின்றனர்.
இவ்வாறு, எமது அரசியல் தலைவர்கள் இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் சமூகமாக இந்நாட்டு மக்களை உருவாக்கியதுடன், அவர்கள் சொல்வதை செய்யும் அடிமைகளாக்கினர்.
பட்டலந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் மோசமான சம்பவங்களாகும். ஊடகங்களுக்கு வரம்பு நிலையை கொண்டு வருவதற்கு கடந்த அரசாங்கம் முயற்சித்திருந்தது. நல்ல வேளையாக இது சட்டமாக்கப்படவில்லை. அவை சட்டமாக இயற்றப்பட்டால் எவரும் கருத்து தெரிவிக்க முடியாது வாயை மூடியிருக்க வேண்டியதுதான்.
இவ்வாறு கொண்டு வருவதற்கு காரணம் என்னவெனில், நம்மில் பலர் பக்கச்சார்பாக சிந்திப்பதுதான். சில ஊடகங்களும் பக்கச் சார்பாக செயற்படுவதுண்டு. இவ்வாறு அவர்கள் செயற்படுவதனால் உண்மைத் தன்மையை மக்கள் அறிய முடியாமல் போகின்றது.
இந்த முறைமையை மாற்றியமைக்க வேண்டும். இந்த அரசியல் கலாச்சாரத்தை மாற்றி அமைப்பதற்காகவே, நாம் இந்த அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றுவதற்கான காரணமாகும். இந்த அரசியல் கலாச்சாரத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.
ஆகவே, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். விசேடமாக ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றுக்கு தடையாக இருக்காதீர்கள். இந்த கலாச்சாரத்தை நிறுத்தி விடுங்கள். இலங்கையில், புதிய சிந்தனைகள், புதிய புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகவே நாம் உங்களுக்கு ஆட்சி அதிகாரத்தை கொடுத்தோம்.
இதனை செயற்படுத்துவதற்கான சட்ட திட்டங்களை மாற்றி அமையுங்கள். மாற்றியமைப்பதற்கு காலம் எடுக்கத் தேவையில்லை. தங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாகில், அந்த அதிகாரத்தை பயன்படுத்தி அவற்றை மாற்றியமைக்க முடியும்.
உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு இனியும் காலம் தாழ்த்தக்கூடாதென்றும், இவ்விடயம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத் துக் கொள்ளாமல், எவருடனும் 'டீல்' போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு தற்போது ஆட்சியுள்ள அரசாங்கம் விரைந்து செயற்படுவது அவசியம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் 6 ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்று பெற்றுக்கொடுக்க வேண்டும்.
அவ்வாறு எமக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம். ஆட்சிபீடம் ஏறியதன் பின்னர் கட்டுவப்பிட்டிக்கு வந்து மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தவறாதீர்கள் என்றார்.

வார இதழ் தேசியம் THESIYAM තේසියම් www.thesiyamnews.com REGISTERED AS A NEWS PAPER






இப்பத்திரிகை 19.03.2025 அன்று இல.12/1 செங்குந்த அங்காடி, பருத்தித்துறை வீதி, யாழ். நல்லூர் பணிமனையில் உள்ள அகரவ் பப்ளிசிங் மீடியா பிறிண்டிங் ஹவுஸ் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.